அல்லா துணை.

# நாஹூரார் பதம்.

திருநெல்வேலிஜில்லா ஆழ்வார்தோப்பு
கோ. ஜி. நாகூர் மீராராவுத்தர் குமாரர்
காதர்முகியித்தீன்ராவுத்தர் அவர்களால்

சிதம்பரம்
விநாயகசுந்தர விலாச அச்சுக்கூடத்தில்;
பதிப்பிக்கப்பட்டது.

30—3—19. விலை அணா 0-1-0.

*

بسم الله

பிஸ்மில்லாஹி,

# நாஹூரார் பதம்.

தெரிசிக்க வாரும் நாஹூர் போய்
தெரிசிக்க வாரும்
நல்லதெரிசிக்க முலகெல்லாம் செனிக்கும்
வரிசையான செய்யது பகோதாஜில்
மீராமுமுய்கையதீன் வரிசொற்கபதியான
காதர்மீரான் சாய்பே
மலரடி கமலத்தை ஒருபோதும மறக்காமல்
தெரிக்க வாரும்.
நாஹூர்போய் தெரிசிக்கவாரும். (1)
நல்லதேசம் தேசமெண்டு தீர்த்தோர்கள் வானோர்கள்
சிந்தையில் புரக்கண்டு
சந்திரிகொடியேத்தி செழுத்திடும் சனங்கள்
சலபாத்தோதி பூசிடும்மணங்கள்
சுந்திரிபார்க்கலாம் வாரும்.
ஒலிகாரணத்தால் பிணிதீரும்

நல்லகந்தூரி பார்க்கலாம் செந்தூரி பார்க்கலாம்
காரணமாகிய பீரையும் பார்க்கலாம்
நாஞ்சூரி தெப்பகுளத்தையும் பார்க்கலாம்
நாதமராம்காதொரு சாய்பே பார்க்கலாம்
கந்தூரிபார்க்கலாம் வாரும்
ஒலிகாரணத்தால் பிணிதீரும். (2)
ஆலமரத்துக்குவாரும் அதுக்கானந்துநிழலைப் பாரும்
கெட்டி சாதத்தைதாரும்
புதுப்பாண்டத்தில் தண்ணீர்கொண்டாரும்
நல்லமுன்னவர்பள்ளியும் அன்னதெரியுது
மூர்க்கமுடனே மணாராய்த்தெரியுது
அஞ்சும்மணாராவும் அன்னதெரியுது
ஆசாரமாவாரும் ஒசாரஞ்செய்யலாம்
கந்தூரிபார்க்கலாம் வாரும்
ஒலிகாரணத்தால்பிணிதீரும்: (3)
நாவூர்பார்க்கலாம் பெண்ணே
எட்டிநடந்து முன்னவாய்க்கண்ணே
ஆனைகுதிரை அணியணியாலகை ஆப்புவெடிகளும்
மத்தளம் மத்திடசேனைஒருங்கச்

சிலம்பும்நெருங்கிட சிங்காரக்கூட்டுக்கு
 தீவட்டி சூழந்திட
நாவூர் பார்க்கலாம் பெண்ணே
 எட்டி நடந்து முன்னவாய்க்கண்ணே. (1)

தம்பூரு மத்தளம் கைத்தள மத்திடசச்
 சோதிகின்னரி வாங்காமுழங்கிட
நம்பியேதிஜொளி தீவவொதுக்கிவாரும்
 நத்தவரெல்லாம் அந்த சித்திரக்கூட்டுக்கு
நாவூருபார்க்கலாம் பெண்ணே எட்டிநடந்து
 முன்னவாய்க்கண்ணே நெய்யோடே
சம்பா அரிசிகுறிவாங்கி நேசமுடனே.
 சமைத்து பொசித்துமெள்ள மெள்ளநட
தோழிமாரு கூடப்பார்க்கலாம்
 தீர்க்கமாபாத்தியாவுதலாம்
நாவூர்பார்க்கலாம்பெண்ணே யெட்டிநடந்து
 முன்னேவாய்க்கண்ணே. (5)

நாவூருகடற்கரை ஜில்லாவிலிருக்கின்ற
 பொழுதே அந்தப் பொழுதே
ஒருநசராணி ஒருவன்கப்பல் மிகுதியகதிப்பட

கண்டோர்வரக் கண்டோர் உங்கள்
கண்ணாடியைவிட்டு முன்னேவர
வழைந்தோமே வெளிநீரே உங்கள்
பாதம் பலரடியே அடியேன் நம்பினேன்
எந்தநாளும் எந்தநாளும்
தஞ்சாவூருமகாராஜன் நொந்தபிணியை
நீக்கினோரே நீக்கினோரே.
அவனஞ்சுமணாராவும் அலங்கார வாசலும்
அன்புடன் கெட்ட வைத்தோரே வைத்தோரே()

கொங்கு பக்கிரி டில்லி புதுரைக்கு குதிரை
எனும் கொடுக்கப்பட்டது
அண்டமிடிந்து விழுந்தாப்போலே
அவரீக்கனைத்ததுபார்
கல்லகோட்டை யிடிந்துவிழுந்தாப்போலே
குலுக்கக் கனைத்ததுபார்
டில்லிபட்டணம் ஐங்காதவழியும்சேர
நடுங்குதுபார் கோடகோபுரம்
மாடமாளிகைகுலுங்க நடுங்குதுபார்

பட்டணமுள்ளஜனங்களெல்லாம்
பதரிவிழுந்ததுபார்
நல்லபட்டணமுள்ளசேனைகளெல்லாம்
பதரிதுடித்தார்கள்
டில்விபுதுரையும் மூர்ச்சைதெளிந்து
திடுக்கிட்டெழுந்தானும்
அண்ணவாடா தம்பிவாடா ராஜலிங்கபாபு
இதுஎன்ன அதிசயம்என்ன அதிசயம்ராஜலிங்கபாபு
அண்டைபிடிந்துவிழுந்ததை சொல்லும்
ராஜலிங்கபாபு
ஏழுமேகமும் கூடிவிழுந்துதோ
இந்தவுலத்திலே தான்
ஜல்திஜல்தி சுத்திபாரும் ராஜலிங்கபாபு
அந்தசெய்தியைகாதிலே கேட்டான் ராஜலிங்கபாபு
ஆனாலும்நல்ல ஆகட்டுமென்றான் ராஜலிங்கபாபு
ஒத்தகுதிரைமேல் ஏறினேனையா ராஜலிங்கபாபு
அங்கேஓடிசுத்திபார்த்தேனையா ராலிங்கபாபு
வடக்கேவெகுதூரம் மின்னுதுபாரும்வர்ணமேகபுரவி
அந்தமின்னலைக்கண்டு குதிரையைவிற்றான்
ராஜலிங்கபாபு

அந்தகுதிரைவருவதை கண்ணாலேகண்டான்
கொங்குபக்கியும் எதிரிலேவந்து சலாம்
செய்தான் அந்தபக்கிரியே
ஓ ஐயாகேளும் ஐயாகேளும்
கொங்குபக்கிரியே
நீர்எந்ததேசத்திலிருந்து குதிரை இங்குகொண்டு
வந்தீர்தெரியஎனக்கு சொல்லும்ஐயா
தேசசபக்கிரியே
இந்தப்பேச்சைகாதிலேகேட்டான்தேசபாக்கிரியும்
ஓ ஐயாகேளும் ஐயாகேளும் ராஜலிங்கபாபு
இந்தவுலகத்தில் பிறந்ததேயில்லே
இந்தக்குதிரைதானும்
இதுதெய்வலோகத்தில் பிறந்தகுதிரை
சொர்ணமேகக்குதிரை
இதுவெள்ளிக்கிழமைபிறந்தகுதிரை
சுரணமேகக்குதிரை
ஐயா பன்னிரண்டு பிராயமையா
பாரேசாதிக்கு இந்த
வுலகத்திலொருவருமில்லே இந்தப்பிறவியேற

தெய்வவதத்திஞல் பிறந்தபிள்ளை
தேசியேறவேணும்
வதத்திஞலே பிறந்தபிள்ளைவந்துயேறவேணும்
தேவரடியில்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
பூமிபாரந்தீர்க்கவந்தபிள்ளை
இந்தபிறவியேறவேணும்
இதுக்குப்பிள்ளை பிறக்கப்போரான்
இந்த வுலத்திலேதான்
நீர் அந்தமட்டும் பாரசாரியை
யட்க்கிகொள்ளுமையா
நான் டில்லி புதுரைக்கு எனும்கொடுக்கநந்தேடிவந்தனென்ரூன்
அந்தபேச்சை காதிலே கேட்டான் ராஜலிங்கபாபு
கேட்டவுடனே மனது கலங்கி கீழே விழுந்தானும்
விழுந்தவுடனே தைரியங்கொண்டுமெள்ளஎழுந்தானும்
இவன் எழுந்தவுடனே ராஜதுரைக்கு எழுதியே விட்டானும்
ஓலைகொண்டுகையிலேகொடுத்தான் ஓடிவந்ததூதன்
ஓலையைப்பிரித்து வாசித்துபார்த்தான் டில்லிபுதுரைதானும்
கல்லென்று சிரித்தானையா டில்லிபுதுரைதானும்
அண்ணுவாடா தம்பிவாடா அர்க்கார் சின்னையா
ஜல்திஜல்தி குதிரையைக் கொண்டா ஆர்க்கார் சின்னையா